ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2163/22 - 2020 පෙබරවාරි මස 19 වැනි බදාදා - 2020.02.19

*2163/22 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி 21/78* (xv) *(அ).*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*21 ஆம் பிரிவுடனும் 139 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அலுவல்கள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றாகவுள்ளதெனக் கருதப்படுகின்றதும் இலங்கை மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதும் (2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 2037/18 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதும்), 2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 03 ஆந் திகதிய 1469/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை, அவ்வட்டவணையின் நிரல்* I *இல் காணப்படுகின்ற "வியாபார பீடம்" என்னும் விடயத்தையும் அவ்வட்டவணையின் நிரல்* II *இலுள்ள நேரொத்த பதிவுகளையும் உடனடுத்துப் பின்வருவனவற்றைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன் :-*

| *நிரல் I* | *நிரல் II* |
| --- | --- |
| "மருத்துவ பீடம் | *1.* உடற் கூற்றியல் துறை (மொத்த மற்றும் மருத்துவக உடற்கூற்றியல்) |
| | *2.* உயிரி இரசாயனவியல் மற்றும் மருத்துவக இரசாயனவியல் துறை |
| | *3.* உடலியங்கியல் துறை |
| | *4.* வாகடவியல் துறை |

*(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* |
| --- | --- |
| | 5. நுண்ணுயிரியல் மற்றும் ஒட்டுண்ணுயியல் துறை |
| | 6. சமுதாய மருத்துவ மற்றும் குடும்ப மருத்துவத் துறை |
| | 7. நோயியல் மற்றும் சட்ட மருத்துவத் துறை |
| | 8. மருத்துவ மற்றும் உளச்சுகாதாரத் துறை (உளமருத்துவவியல்) |
| | 9. அறுவை மருத்துவ மற்றும் உணர்வகற்றல் துறை |
| | 10. பெண்ணோயியல் மற்றும் மகப்பேற்றியல் துறை |
| | 11. குழந்தை மருத்துவவியல் மற்றும்க சிசு மருத்துவவியல் துறை |
| | 12. மருத்துவக் கல்வித் துறை |
| | 13. மருத்துவத் தொழில்நுட்பவியல் துறை.”. |

கலாநிதி பந்துல குணவர்த்தன,
உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர்.

கொழும்பு,
*2020*, பெப்புருவரி *18*.

*03-132*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.